| | | | |
|---|---|---|---|
| Headline | Number of HIV patients will reduce | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 06 Sep 2013 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 13 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 128 cm² |
| Journalist | N/A | AdValue | RM 315 |
| Frequency | Daily | PR Value | RM 945 |



# எச்.ஐ.வி. தொற்றியோரின் எண்ணிக்கையை குறைக்கும் இலக்கு முன்கூட்டியே நிறைவேறும்

மலாக்கா, செப். 6–

எதிர்வரும் 2015ஆம் ஆண்டுக்குள் நாட்டில் எச்.ஐ.வி. தொற்றியோரின் இலக்கை ஒவ்வொரு 100,000 குடியிருப்பாளர்களுக்கு மத்தியில் 11 விழுக்காடாக குறைக்கும் இலக்கு முன்கூட்டியே நிறைவேறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுதோறும் நாட்டில் எச்.ஐ.வி. தொற்றால் பாதிப்புறுவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதைக் கருத்தில் கொண்டு இந்தக் கணிப்பு வெளியிடப்படுவதாக சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டில் நாட்டில் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு 100,000 பேருக்கும் 21.7 விழுக்காடாக இருந்தது. கடந்த ஆண்டு அது 11.7 விழுக்காடாகக் குறைந்துவிட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம், அரசு சார்பற்ற இயக்கங்கள், தனிப்பட்டவர்களின் ஒத்துழைப்பால் கிடைத்த அடைவுநிலையாகும் இது. இந்த முயற்சி தொடரப்பட வேண்டும். காலத்திற்குத் தகுந்தபடி இந்த முயற்சி மேம்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

இப்போது அடையப்பெற்றிருக்கும் நிலையைக் கண்டு நாம் இறுமாந்திருந்துவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டோமானால் மீண்டும் அதிரடியாக எச்.ஐ.வி. தொற்றியோரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துவிடக்கூட வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த 1986ஆம் ஆண்டு முதல் எச்.ஐ.வி. நபர் அடையாளங்காணப்பட்டது முதல் கடந்த டிசம்பர் மாதம் வரையில் மொத்தம் 98,279 பேர் இந்நோய்த் தொற்றுக்கு ஆளாகியிருப்பது அடையாளம் காணப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டுமே நாட்டில் 3,438 பேருக்கு இந்த நோய்க் கிருமி தொற்றியிருப்பது அடையாளங் காணப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

Powered by: iSENTIA